தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதியில் திராவிட மாடல் அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நகரச் செயலாளர் முகமது இலியாஸ் தலைமையில் நடைபெற்றது. ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் பி.டி. செல்லபாண்டி, யூனியன் சேர்மன் தங்கவேல், சக்கரவர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் எல்.எம்.பாண்டி சக்கரவர்த்தி, கண்ணியம் பட்டி முருகேசன், திண்டுக்கல் மண்டல எல்.பி.எப். பொதுச் செயலாளர் செந்தில், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன், பேரூராட்சி தலைவர்கள் பால்பாண்டி, நாகராஜ் மற்றும் நகரச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

குன்றத்தூர் நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றினார். அருகில் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

அடிகளாரின் தமிழ்ப்பணியை பாராட்டி மேலவை உறுப்பினராக்கியவர் கலைஞர்!

அறிவியலுடன் ஆன்மீகச் சிந்தனைகளை இணைத்து பரப்பியவர் குன்றக்குடி அடிகளார்!

28வது குருபூஜை விழாவில் - குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பாராட்டு!

சிவகங்கை, மே 9 -

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் குன்றக்குடி மடம் உள்ளது இந்த மடத்தின் 45 வதுஆதீனமாக குரும கா ச ன் னி தா ன ம் திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் மடாதிபதியாக இருந்து வந்தார். இவர் தமிழகம் முழுவதும் பட்டிமன்றத்தின் வாயிலாக ஆன்மீக சிந்தனைகளை பரப்பி வந்தார். இவர் கடந்த 1993 ஆம் ஆண்டு மரணமடைந்தார். அவரது நினைவினை போற்றும் வகையில் 28 வது ஆண்டு குரு பூஜை விழா குன்றக்குடி மடத்தில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ரத்தனகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம்சிவஞானபாலய சுவாமிகள், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் ஜி. ரவி துலாவூர் ஆதீனம் ரவீந்திர சுவாமிகள் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் முனைவர் சேதுபதி வரவேற்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளுக்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் விருதினை வழங்கி தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் பேசியதாவது:

குன்றக்குடி மடத்தின் 45 வது குருமகா சன்னிதனமாக தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் திகழ்ந்து வந்தார். அவர் மறைந்து 28 ஆண்டுகள் ஆகின்றது. மடங்கள் மக்களை தேடிச் செல்ல வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் அனைத்து தரப்பட்ட மக்களையும் அரவணைத்து அவர்கள் பிரச்சனைகளை தீர்த்து வந்தார். கீழவெண்மணி கலவரம்ஏற்பட்டபோது தனி ஒருவராக அங்கு சென்று அந்த பிரச்சினையை தீர்க்க பாடு

பட்டார்.

இதேபோல் மண்டைக்காடு கலவரம் ஏற்பட்ட போது அப்பகுதி மக்களை கிராமம் தோறும் சென்று அமைதியை ஏற்படுத்தினார். இந்தியா - சீன போரின்போது தனது கழுத்தில் அணிந்திருந்த தங்க உத்திராட்ச மாலையை மேடையில் ஏலம் விட்டு அன்றைய மதிப்பில் ரூபாய் 4000 வழங்கினார். நாட்டின் பிரச்சினைகளிலும், மக்கள் பிரச்சினைகளிலும் அவர் பங்கேற்று அயராது பாடுபட்டவர். தேசத்தில் ஆன்மீகத்துடன் அறிவியலும் இணைய வேண்டும் என்று விரும்பினார்.அதற்காக குன்றக்குடியில் பல்வேறு கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தினார்.

தமிழகத்தில் நடைபெற்ற இந்தி திணிப்பு போராட்டத்திலும் பங்கேற்றார். அதற்காக நீதிமன்றத்தில் அவருக்கு அபராதத்தொகை விதிக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக பதவி ஏற்றதும் அந்த அபராதத்தொகையினை ரத்து செய்து உத்திரவிட்டார். தந்தை பெரியாருடன் நெருங்கிப் பழகி வந்தார். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருடன் தொடர்ந்து நட்புடன் பணியாற்றி வந்தார் . பெரியாரை குன்றக்குடி மடத்திற்கு அழைத்து வந்தார். அவருடன் பல்வேறு விஷயங்கள் பற்றி விவாதித்தார்.

அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், அடிகளாரும் நெருங்கிய நட்புடன் பழகியவர்கள். அடிகளாரின் தமிழ்ப் பணியை பாராட்டி அவருக்கு மேலவை உறுப் பினர் பதவி தர வேண்டும் என்று தலைவர் கலைஞர் விரும்பினார். அதை மிகுந்த தயக்கத்துடன் அடிகளார் ஏற்றுக்கொண்டு பல் வேறு பணிகளை திறம்பட செய்தார். குன்றக்குடி மடம் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அதனை தொடர்ந்து இந்த மடம் இப்பொழுது வரை கடைபிடித்து வருகிறது.

ஆன்மிகத்துடன் அறிவியலும் இணைந்து பாடுபட்டால்தான் நாட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் பாலமாக அமையும் என்று தவத்திரு குன்றக்குடிஅடிகளார் விரும்பினார். அதை நாம் அனைவரும் நிறைவேற்ற பாடுபட வேண்டும். இந்த குருபூஜை விழாவில் நாம் அனைவரும் அதை உறுதியாக ஏற்க வேண்டும்.

இவ்வாறு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசினார்.

நிகழ்ச்சியில் குன்னக்குடிஆதீனத்தின்கீழ் உள்ளபள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்கள், ஆசிரியர், ஆசிரியைகளை, குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பாராட்டி பொன்னாடை அணிவித்தார்.

தொடர்ந்து குன்றக்குடி அடிகளார் மணிமண்ட பத்தில் உள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் சிலைக்கு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பாலமுருகனடிமை சுவாமிகள், மைலம் சிவஞான பால சுவாமிகள் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ஜி. ரவி உட்பட பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். தொடர்ந்து மடத்தில் அன்னதானம் நடைபெற்றது. இந்த குருபூஜை விழாவில் மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் பொன்மணிபாஸ்கரன், ஒன்றிய கவுன்சிலர்மருதுபாண்டியன் ஊராட்சி மன்றத் தலைவர் அலர்மேலுமங்கை துணைத்தலைவர் கணேசன் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

மடத்தின் மேலாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

சோ.பா.மலர்வண்ணன் தலைமை

கீழையூரில் 2 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

என்.கௌதமன் – எழும்பூர் கோபி சிறப்புரை

சென்னை, மே,9,

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் கீழையூர் மேற்கு ஒன்றியக் கழகம் சார்பில் இன்று (9.5.2023) மாலை 6 மணிக்கு கொளப்பாடு, கடைவீதியில் நடைபெறுகின்றது.

இக் கூட்டத்திற்கு என். அசோக்குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகின்றார். ஒன்றியச் செயலாளர் சோ.பா. மலர்வண்ணன் தலைமை வகிக்கிறார்.

இல.பழனியப்பன், கோசி. குமார், ஆர்.ஜி. தமிழரசி, வெ.சண்முகசுந்தரம், கே.சுரேஷ், எஸ்.கே. பார்த்திபன்,வி.எஸ்.குமார்,பி.நிர்மல் ராஜ், எஸ்.வடுகநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் கே.கோபி, தமிழ்நாடு தாட்கோ தலைவர் உ.மதிவாணன் , இல.மேகநாதன், சுதா அருணகிரி, லென் சோயா சிவபாதம், எஸ்.ஆர். கலைச்செலியன், கே.எஸ்.தனபாலன், ஜி.செல்வ ராஜ்,இறை தம்பி த.சேகர், லேகா கார்ல் மார்க்ஸ், வள்ளி சண்முகநாதன், வி.எம்.கே. பாரதி, சாந்தி சரவணகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர். ஜெயந்தி மாசிலாமணி நன்றி கூறுகிறார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை

தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதி கழக செயற்குழு கூட்டம்!

பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., -கே.ஏழுமலை அறிவிப்பு!

சென்னை, மே 9-

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்குப் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தியாகராயர்நகர் கிழக்கு - மேற்கு பகுதி செயற்குழு ஆலோசனை கூட்டம் நாளை (10-05-2023. புதன்கிழமை) மாலை 7 மணி அளவில் எண் 29, மேட்லி சாலையில் அமைந்துள்ள மனமகிழ் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இந்த கூட்டத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

கூட்டத்திற்கு சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். நாங்கள் (பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.,கே.ஏழுமலை எம்.சி.) முன்னிலை வகிக்கிறோம்.

இக்கூட்டத்தில் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஈராண்டு சாதனை விழா நடைபெற்றது விழாவில் 981 பேருக்கு ரூ.4.17 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கி பேசினார். இந்த நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் பிரவீன்குமார்,மாவட்ட வருவாய் அலுவலர் கோவிந்தராஜலு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. முருகவேல், ஒன்றிய சேர்மன் சுப்புலட்சுமி ஜீவானந்தம்,புல்லாணி மற்றும் அரசுத்துறை அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

டி.குமார் தலைமையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

சாலவாக்கம் ஒன்றியம் சார்பில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

க.சுந்தர் எம்.எல்.ஏ. - க.செல்வம் எம்.பி. - மனுராஜ் சண்முகசுந்தரம் சிறப்புரை

காஞ்சிபுரம் , மே 9 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டாம் ஆண்டு கால சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (9.5.2023) மாலை 6 மணிக்கு சடச்சிவாக்கத்தில ஒன்றியச் செயலாளர் டி.குமார் தலைமையிலும், ஒன்றிய துணைச் செயலாளர் டி.தமிழ்வேந்தன் வரவேற்பிலும் நடைபெறுகிறது.

நதியா கோபி, அமுதா தமிழ்வேந்தன், சி.ஜி.பாபு, டி.தீனதயாளன், கே.தயாளன், ஏ.கிருஷ்ணதாஸ், வி.வெஸ்லி எஸ்.புண்ணியக்கோட்டி, கே.கோவிந்தசாமி, ஜி.மனோகரன், ஆர்.கோபால், கே.லட்சுமணன், ஏழுமலை, பிரகாஷ் கே.பக்தவச்சலம் , குருமூர்த்தி, எஸ்.நாராயணசாமி, ஆர்.அரிதாஸ், டி.பரத்குமார், ஆர். சுரேஷ், எம்.மஞ்சுளா, ஜி.மங்கலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., தலைமைக் கழகப் பேச்சாளர் மனுராஜ் சண்முகசுந்தரம் ஆகியோர் சாதனைகளை விளக்கி உரையாற்றுகின்றனர்.

ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், இரா. நாகன், கு.துரைவேல், . என். ரவி, ஞா.ஹேமலதா, கு. வசந்தி, கோ.சிவராமன், எஸ். ஆர்.வெங்கடேசன், ப.சசிகுமார், என்.எஸ்.பாரிவள்ளல், த.சத்தியமூர்த்தி, பெ.மணி, எஸ்.ரத்தினமாலா, அ.அரசு, சரசு கந்தன், ப.கார்த்திகேயன், என். .எஸ்.ரவி, வி.ஞானசேகர், க.வெங்கட்ராமன், டி.கோகுல கண்ணன், எஸ்.முரளிதரன், ஆர்.விஜயா, சு.பலராமன், செ.விஷ்ணு, இ.நந்தா, பி. வி.அழகப்பன், ஜி.கோபி, ஜெ.சுஜாதா , ஆர்.வெங்கடசுப்பிரமணி, ஐ.பாபுஷரீப், பவுன் சின்ராஜ், த.அன்புராஜ், பி. சேகர், ஆர்.சந்திரா , ஆர்.கல்யாணசுந்தரம், பி.சுப்பிரமணி, தீபா காமராஜ், எஸ்.ஜானகிராமன், பி.கார்த்தி, எஸ்.கௌரிநாதன், எ.தர்மராஜ், கோ.சத்தியா, கே.அருண்பிரசாத், ஜெ.அரவிந்தன், எஸ்.லீலாவினோதன், எஸ்.பி.வி.சத்தியா, சக்திவேல், பி.வெங்கடேசன், எ.தர்மராஜ், நாகம்மாள், மாரி, தா.சுந்திரமூர்த்தி, கே.கார்த்திகேயன், கே.கோதண்டராமன், சுதா லட்சுமி, செல்வகுமார், க. வெங்கட்ராமன், சுதாஜா, ஜெயராமன், சற்குணம், மாதவன், பூங்கோதை, சேட்டு, பொன்மொழிசுபாஷ், தேன்மொழி, மணி,மஞ்சுளா முருகன், ஜெயகாந்தா முரளி, கோமளா ஐயப்பன், சுப்பம்மாள் தம்பிப்பெருமாள், கலைச்செல்வி கோதண்டராமன், எழிலரசி யுவராஜ், பி.சுப்பிரவேமணி, ஈ.இ. பலர் கலந்து கொள்கின்றனர்

ஜெயசுதா பக்தவச்சலம் நன்றி கூறுகிறார்.

ச.பரமசிவம் தலைமை! எம்.கே. மோகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

அண்ணாநகர் வடக்கில் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

தயாநிதி மாறன் எம்.பி. – நே.சிற்றரசு சிறப்புரை!

சென்னை, மே 9-

சென்னை, மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகம் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் 2-ஆம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (9.5.2023- செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்கு, டி.பி.சத்திரம் மார்க்கெட் அருகில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு அண்ணாநகர் வடக்குப் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் தலைமை வகிக்கிறார்.

100வது வட்டச் செயலாளர் கு.பாபு அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். வசந்தி பரமசிவம் எம்.சி., பா.பிரபு, வி.சாய் செல்வம், இரா.இளங்கோ, மரியா பிரான்சிஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எம். கே.மோகன் எம்.எல்.ஏ., கார்த்திக் மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

134 (அ) வட்ட துணைச் செயலாளர் எஸ்.பரிமளாவின் கணவர்

பழம் கோ.சுந்தரமூர்த்தி முதலாமாண்டு நினைவு நாள்!

திருவுருவப் படத்தினை - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, மே 9-

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி, 134(அ) வட்ட துணைச் செயலாளர் எஸ். பரிமளா சுந்தரமூர்த்தியின் கணவர் பழம் கோ. சுந்தரமூர்த்தி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு படத்திறப்பு நிகழ்ச்சி ஜி.பி.செந்தில்குமரன் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம், மாவட்டப் பிரதிநிதி ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் இன்று (9.5.2023 - செவ்வாய்) காலை 10 மணியளவில் சுப்பாரெட்டி தெரு, கிளை கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

படத்தினை திறந்து வைத்து பொதுமக்களுக்கு உணவினை தியாக ராயர் நகர் கிழக்கு பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் 134 (அ) வட்ட நிர்வாகிகள் எஸ்.மாரிமுத்து, இ.விஸ்வநாதன், ஆ.சந்தோஷ்குமார், எஸ். பரிமளா சுந்தரமூர்த்தி, ஏ. சிமியோன் ராஜா, ஜி.வெங்கடேசன், ஏ.பி.நாகேஷ், பி.ஜி.ராஜ், சு.பூபதி, ஆர். லோகேஷ்,

டி.வேதகிரி, டி.சுப்பிரமணி, எம்.பெரியசாமி, எஸ்.ஸ்ரீதர், ஜி.வரதராஜன், ஆர்.ராஜா, கே.பாண்டியன், ஆர்.சீனுவாசன், செ. முருகன், ஆ.கோபால், டி.விக்னேஷ்குமார், டி. எம்.ஜெயக்குமார், ஆட்டோ ஏழுமலை, ஜெ.ஜஸ்வர்யா எஸ். சுரேஷ், வி.மணி பாரதி, வி.சுதர்சனம், வி.நாகராஜ், ஆட்டோ எம்.சம்பத், டி.முருகன், ஆர்.ஐயப்பன், ட.லட்சுமணன், பி.வரதன், கே.ஜெயராமன், லோகு, ஆர்.கே.ராஜ்குமார், எஸ். சிவபிரகாஷ், எம்.அஜித்குமார், எல்.குணா, எஸ்.சரவணன், எம்.கே.அஜித்குமார், இ.காமாட்சி, எஸ்.வசந்தா, வி.அனிதா, எஸ். சிவானந்தம், ஜெ.ஈஸ்வரன், வேலு ராதாகிருஷ்ணன், எ.அரிராஜ், பால்காரர் ஆர். ராஜேந்திரன், ஏ.பிரகாஷ், செ.புகழேந்தி, வி.குமார், பரத், தினேஷ், கார்த்திக், ஜி.செல்வம், ராஜவேல், எம்.ஜெயக்குமார், ஆர். செல்வம், எம்.மகேஷ், பி. பலராமன், பி.தமிழரசன், ஆர்.வினோத்குமார், பி. அஜித்குமார், எல்.மோகன், எஸ்.லோகேஷ், கே. மோகன், என்.கணேஷ், எம்.விஜய், எம்.சஞ்சய், எஸ்.புருஷோத்தமன், கே. மதன், என்.ராஜேஷ், எம். பாலாஜி, எஸ்.சக்திவேல், திருவேங்கடம் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கி

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் பொதுக்கூட்டங்கள்!

மாவட்ட செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்டம் சார்பில் கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டுகள் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெறும்:

நாள் : 09.05.2023 / நேரம் : மாலை 6 மணி

பகுதி	இடம்	தலைமை	பேசுவோர்
கலைஞர்நகர் தெற்கு	புகழேந்தி தெரு, எம்.ஜி.ஆர்.நகர்	எஸ்.உமாபதி அவைத் தலைவர்	திருவொற்றியூர் கருணாநிதி
மதுரவாயல் வடக்கு	146வது வட்டம் பாரதிதாசன் நகர்	நொளம்பூர் ராஜன் எம்.சி., பகுதிச் செயலாளர்	சையத் அபீஸ்
வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம்	ஆண்டாள் நகர், வானகரம்	சதீஷ்குமார் மாவட்டப் பிரதிநிதி	பத்மபிரியா, மாநில துணை அமைப்பாளர், தகவல் தொழில்நுட்ப அணி
சைதை மேற்கு	கொத்தவால்சாவடி தெரு, குமார் ஓட்டல் அருகில்	எம்.நாகா வட்டச் செயலாளர்	எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., ஆலந்தூர் மலர்மன்னன் சைதை மா.அன்பரசன் தலைமை பொதுக்குழு உறுப்பினர்
சோழிங்கநல்லூர் மத்தி.	காரப்பாக்கம், ஓ.எம்.ஆர்.	எஸ்.அரவிந்த்ரமேஷ், எம்.எல்.ஏ.,	டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ.,

அமைச்சர் மா.சுப்பிரமணியன்,
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் திமுக சார்பில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மருத்துவம்படி ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் கெ. ஞானசேகரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக மருத்துவ அணி துணை செயலாளர் ஆர்.டி. அரசு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் உடன் இரா. நாகன் பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார். மா.ஏழுமலை. ஒன்றிய குழு உறுப்பினர் . திருமதி வீரம்மாள் மாயகிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர் வி.வெங்கடேசன் உள்ளிட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.